Mrs B. Spellmen
Divisional Secretariat,
Jaffna.

COUNCIL FOR ELDERS

# முதியோர் அமைப்பிற்கான கையேடு

தேசிய முதியோா செயலகம்
இலக்கம் 150ஏ,
எல்.எச்.பி.கட்டிடம்,
நாவல வீதி,
நுகேகொடை.
தொலைபேசி : 011-2824082
தொலைநகல் : 011-2326750

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம மட்டத்தில் முதியோர் ஒழுங்கமைப்புக்கான கையேடு

### அறிமுகம்

இன்றைய இலங்கையில் அதிகரித்து வருகின்ற முதியோர் சனத்தொகை சமூகம்,பொருளாதாரம்,கலாச்சாரம், என்றவாறு பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்த வண்ணம் உள்ளது. முதியோர்கள் எதிர் நோக்குகின்ற
பிரச்சினைகளை கிராமமட்டத்திலேயே தீர்த்துக் கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை காத்துக் கொள்வதற்கும் பொதுவாகக் கூறின் அனைத்து முதியோர்களினதும் உடல், உள,சமய, சமூக நலன்புரி என்பவற்றின் மேம்பாட்டிற்காகச் செயற்படுவதற்கு முதியோர்களை ஒழுங்கமைப்பொன்றினுள் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ள முதியோர்களுக்கான தேசிய சபை கிராமமட்டத்தில் முதியோர் அமைப்புக்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2000ம் ஆண்டின் 09ம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள தேசிய சபையின் மூலம் நாட்டின் எல்லாக் கிராமங்களிலும் முதியோர் கிராமிய அமைப்புக்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் அவ்வமைப்புக்கள் சக்தி வாய்ந்த ஒழுங்கமைப்புகளாக ஆவதற்கும்; முடிந்த அளவில் நாட்டின் மொத்த முதியோர் சனத்தொகைக்கும் வசதி வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கில் செயற்படுவதற்கும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இக் கையேட்டை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வமைப்பு சிறப்பாக இயங்கி முதியோர்களுக்கான தேசிய சபையின் கீழ் பதிவு செய்து கொள்வதன் மூலம் தமது பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக சட்ட பூர்வமானதும் சமூகம் ஏற்றுக் கொண்டதுமான ஒரு அமைப்பாக இயங்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியோர்களுக்கான தேசிய சபையின் பணிகள்.

கிராமிய முதியோர் அமைப்புக்களுக்கு முதியோர்களின் நலனை மையமாகக் கொண்டு நிகழ்ச்சித் திட்டங்களை அமைப்பதற்காக முதலில் தேசிய சபையின் பணிகள் பற்றிய விளக்கமொன்றை பெற்றுக் கொள்வது மிகவும் அநுகூலமாக அமையும் தேசிய சபையின் பணிகள் பின்வருமாறு.

1.பிரதான பணி

சபையின் பிரதா[illegible] பணியாவது இலங்கையிலுள்ள முதியோர்களின் நல[illegible] புரிதல்களை மேற்கொள்ளல், மற்றும் அவர்களின் உரிமைகளை மேம்படுத்துதல் பாதுகாத்தலுடன் முதியோர்கள், ஆத்ம கௌரவம், சுயாதீனம், மதிப்பு என்பவற்றைக் கொண்ட வாழ்க்கையொன்று வாழ்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் என்வனவாகும்.

1.11.ஏனைய பணிகள்

(அ) முதியோர்களின் நலன் புரிதல்கள், உரிமை மேம்படுத்தல்கள் பற்றி அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) இலங்கையில் சம்பிரதாய பூர்வ விழுமியங்களின் அடிப்படையில் குடும்ப அமைப்பை வலுவூட்டுவதற்காக அரசிற்கும் ஏனைய பொருத்தமான நிறுவனங்களுக்கும் வேலைத்திட்டங்களைப் பற்றி சிபார்சு செய்தல்.

(இ) முதியோர்களுக்கான நலன்புரிதல்கள் மற்றும் அவர்களின் உரிமைகளை மேம்படுத்தல் பாதுகாத்தல் என்பவற்றுக்காக உரிய அமைச்சு,மாகாண அதிகாரசபை மாகாண நிர்வாகத்திற்குட்பட்ட நிறுவனங்கள், மாவட்ட பிரதேச செயலகங்கள், சமய ஸ்தாபனங்கள், அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்கள் தனியார் பிரிவுகளின் ஒழுங்கமைப்புக்கள் என்பவற்றில் வினவி தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

(ஈ) முதியோர்களுக்காக சிறுவர் இளைஞர் சமூகங்களின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை அவர்களுக்கு நன்கு விளங்க வைப்பதற்காக பாடசாலைகளிலும் ஏனைய பொருத்தமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களிலும் விரிவுரைகள் மாநாடுகள் பயிற்சிப்பட்டறைகள்,பிற நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை ஒழுங்கமைத்தல்.

(உ) முதியோர் தொடர்பான சர்வதேச பிரகடனங்கள் பின்பற்ற வேண்டிய சட்டவிதிகள் என்பன இலங்கை அரசாங்கத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா, எனவும் அவ்வாறே அவை செயல்படுத்தப்படுகின்றதா என்பதையும் கவனித்துக் கொள்ளல்.

(ஊ) முதியோர்கள் பற்றிய திருத்தமானதும் சம காலத்திற்குரியதுமான புள்ளி விபரங்களைத் திரட்டிப் பேணுதல்.

(எ) முதியோர்களின் பிரச்சினைகளில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய பிரதான காரணங்கள், அவர்களின் தேவைகள், அபிலாசைகள் என்பவற்றை இனங்காணும் நோக்கில், ஆய்வுகளையும், பரிசீலனைகளையும் மேம்படுத்துதல், மற்றும் அக்காரணங்களை இல்லா தொழிப்பதற்கு அல்லது வேருடன் கலற்றி எறிவதற்கு வேண்டிய அவர்களின் அத்தேவைகளையும், அபிலாசைகளையும் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

(ஏ) முதியோர்களின் பிரச்சினைகள்,தேவைகள்,அபிலாசைகள் பற்றி பொது மக்களை அறிவூட்டும் நோக்கில் மேலே பந்தி (எ) இல் குறிப்பிட்டுள்ள ஆய்வுகள், பரிசீலனைகள் திரட்டிக் கொள்ளல்கள் என்பவற்றிற்குப் பொருத்தமான அனைத்து வழிமுறைகளினுடும் உரிய துலங்கல் ஒன்றை பெற்றுக் கொடுத்தல்.

(ஐ) அநாதை முதியோர்களுக்கு வதிவிட வசதியுள்ள நலன்புரி நிலையங்கள் விளையாட்டு மத்திய நிலையங்கள் பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் பொருத்தமான நிறுவனங்களை உருவாக்குவதற்காக ஊக்கப்படுத்துதலும், அவ்வாறான நிலையங்களுக்கும் நிறுவனங்களுக்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலும்.

(ஒ) முதியோர்களின் நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக அரசின் மூலம் தொண்டர் நிறுவனங்களின் மூலம், ஆரம்பிக்கப்பட்டதும் செயற்படுத்தப் படுவதுமான நிகழ்ச்சித்திட்டங்கள் உத்தேசத் திட்டங்கள் என்பவற்றை மேற்பார்வைச் செய்தலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்புச் செய்தலும்.

(ஓ) முதியோர்களுக்காக சுகாதார/ காப்புறுதி அநுகூல/ உத்தேசத் திட்டத்தை/ அறிமுகப்படுத்தலும் செயற்படுத்தலும்.

(ஔ) முதியோர்களுக்கான சேவைகள்/ பற்றிய தகவல்களை / அவர்களுக்கு வழங்குதல்.

(ஃ) முதியோர்கள் அறிந்து கொள்வதற்காக சம்பளம் வழங்கப்படுகின்ற, சம்பளம் வழங்கப்படாத தொழில் வாய்ப்புக்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை நடைமுறைப்படுத்தலும் முடிந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்களிற்கு வருமானம் ஒன்று கிடைக்கும் வகையில் தொழில் ஒன்றில் அல்லது பணியொன்றில் ஈடுபடுவதற்காக உதவியளித்தல்.

(க) பொதுமக்கள் அறிந்து கொள்ளும் விதத்தில் முதியோர்களின் சிறப்பான ஆற்றல்கள், திறமைகள் என்பவற்றை உள்ளடக்கி அவர்களைப் பற்றிய பெயர் விபரங்களடங்கிய பட்டியல் ஒன்றை நடைமுறைப்படுத்திச் செல்லல்.

(கா) தேவையான சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு முதியோர்களுக்கு வசதி, வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தலும் பராமரிப்புச் செலவை தேடிப் பெற்றுக் கொள்ள முடியாத பெற்றோர்களுக்கு தமது பிள்ளைகளிடமிருந்து கொடுப்பனவு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு பராமரிப்புச் சபைக்கு வேண்டுவதற்கான உதவியளித்தல்.

(கி) இயற்கையாகவும் சுயமாகவும் ஏற்படக்கூடிய வயோதிபத்திற்கு முகங் கொடுப்பதற்கு இளைஞர் சமூகத்தில் நம்பிக்கையும், உறுதியையும் ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தலும், பொருத்தமான சமூகப் பாதுகாப்பு உத்தேசத் திட்டங்களை ஆரம்பித்து இளைஞர் சமூகம் அவ்வாறான உத்தேச திட்டங்களுக்கு தம்மை அர்ப்பணித்துக் கொள்வதற்காக ஊக்குவித்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியோர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள்.

பாராளுமன்றத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட 2000ம் ஆண்டு 09ம் இலக்க முதியோர் உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 60 வயதைத் தாண்டியவர்களே முதியோர்களாக கணிக்கப்படுகின்றனர். இச் சட்டத்தின் கிழ் முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் பின்வருமாறு.

1. பிள்ளைகளின் மூலம் அ[illegible]களின் பெற்றார்கள் வேண்டுமென்றே கவனியாது விடுதலை செய்யகூடாது என்பதுடன் அவர்களின் பெற்றோர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதும்,அவர்களின் தேவைகள் பற்றி தேடிப் பார்ப்பது என்பன பிள்ளைகளின் கடமையும் பொறுப்புமாகும்

2. பிள்ளைகளற்ற, அல்லது பிள்ளைகளின் மூலம் பராமரிக்கப்படாத அநாதை முதியோர்களுக்கு பொருத்தமான வாசஸ்தல வசதிகளை அரசின் மூலம் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

3. ஏதுமொரு தொகை கட்டணம் செலுத்தி அல்லது கட்டணம் செலுத்தாமல் வேறொரு நபருக்கு பிரவேசிப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு உரிமையுடைய யாதுமொரு கட்டிடத்தில் அல்லது இடத்தில் அல்லது நிறுவனத்தினுள் முதியவர் ஒருவர் பிரவேசிப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு அவரின் வயதின் காரணமாக ஏதுமொரு விசேட பொறுப்பு அல்லது தடை அல்லது ஒப்பந்த மொன்றுக்கு கீழ்படிய வேண்டியதில்லை.

கிராமிய முதியோர் அமைப்புக்களை உருவாக்குவதன் நோக்கங்கள்.

* முதியோர்களின் பங்களிப்பினூடாக கிராமசேவகர் பிரிவிலுள்ள முதியோர்களின் சமூக பொருளாதார,சமய கலாச்சார மேம்பாட்டை உருவாக்குவதற்காக முதியோர்களை ஒன்று சேர்த்தலும்,அதற்காக பங்களிப்பை வழங்குதலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டுவதன் மூலம் மனிதநேய சமூக சூழ்நிலை ஒன்றினூடாக எல்லா வயதுக் குழுக்களுக்குமான சமூகம் ஒன்றை கட்டியெழுப்புதல்.

* முதியோர்களின் சுதந்திரம், பராமரிப்பு,பங்களிப்பு, ஆத்ம திருப்தி, கௌரவம் என்பவற்றைப் பாதுகாத்தல்.

* சுயதொழில் வேலைத்திட்டத்தின் மூலம் வறுமையான முதியவர்களின் வருமான நிலையை மேம்படுத்துதல்.

* குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள அரச நிறுவனங்கள், மாகாணசபையின் கீழுள்ள நிறுவனங்கள், அரசசார்பற்ற ஒழுங்கமைப்புக்கள்,தனியார் துறை, என்பவற்றின் ஒத்துழைப்புடன் முதியவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

* பிரதேசத்தில் வாழ்கின்ற முதியோர்கள் எதிர்நோக்குகின்ற பொதுப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உதவுதலும் அதுபற்றி உரிய நிறுவனங்களுக்கு தெளிவுபடுத்தலும், பிற்பட்ட மேற்பார்வைச் செயற்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

* முதியவர்களுக்கிடையே காணப்படக் கூடிய வளங்களையும்,பங்களிப்புக்களையும் இனங்கண்டு, அவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வேலைத் திட்டங்களை ஒழுங்கமைத்தல்.

* செய்தித் தாள்களைப் பிரசுரித்தல், கூட்டங்கள் நடாத்துதல் என்பவற்றினூடாக முதியோர் அமைப்பின் அங்கத்தவரிடையே தொடர்புகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஒழுங்கமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் பற்றிய முன்னேற்றத்தை மாகாண/ மாவட்ட/ பிரதேச அதிகாரிகளுக்கும் முதியோர்களுக்கான தேசிய சபையின் தலைமைத்துவத்திற்கும் தவணைக்கு ஒரு முறை அறிக்கை சமர்ப்பித்தல்.

* பெற்றோர்கள், பிள்ளைகள் இடையேயான தொடர்புகளினூடாக சிறந்ததோர் குடும்பச் சூழல் ஒன்றை கட்டியெழுப்புவதன் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக சமூக நலனை கட்டியெழுப்புதல்.

* கலாச்சார விழுமியங்களை மதிக்கின்ற முதியோர்களுக்கு மரியாதை செய்கின்ற சமூகச் சூழல் ஒன்றைக் கட்டியெழுப்புதல்.

ஒழுங்கமைப்பு.

அங்கத்துவம் :- கிராமிய முதியோர் அமைப்பின் நோக்கங்கள் குறிக்கோள்களுக்கு உடன்பட்டுச் செயற்படுவதற்கு விருப்பமான 60 வயதை தாண்டிய எந்த ஒருவருக்கும் முதியோர் அமைப்பில் அங்கத்துவம் பெற முடியும். குறிப்பிட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பொது இடமொன்றில் அல்லது சமய நிலையமொன்றில் அல்லது இட வசதியுள்ள வீடொன்றில் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும்.அமைப்பு தீர்மானிக்கும் திகதி, நேரத்தில் அதாவது குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது கூட்டம் நடாத்துவது பொருத்தமானதாகும்.

உத்தியோகத்தர்களை நியமித்தல்.

அமைப்பின் நிர்வாகத்தை பொறுப்பேற்று செயற்படுத்துவதற்காக அங்கத்தவர்களை நியமித்துக் கொள்ளும் நிருவாக சபையொன்றை நியமித்தல் வேண்டும். இச்சபையில் தலைவர்,உபதலைவர் ,செயலாளர்,பொருளாளர் நிருவாக சபை உத்தியோகத்தர்கள் என்போர் அடங்குவர்.

பதவிகள் செல்லுபடியற்றலாகுதல்.

I. அங்கத்துவம் செல்லுபடியற்றலாகுதல் மூலம்
II. அங்கத்துவர் இறப்பதன் மூலம்
III. கேட்டு விலகுவதன் மூலம்
IV. அறிவிக்காமல், தொடர்ச்சியாக ஐந்து கூட்டங்களுக்கு சமூகமளிக்காது இருப்பதன் மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. நிறுவனத்தின் முன்னேற்றம், நோக்கங்களுக்கு முரணாகச் செயற்படுதல் மூலம்.

VI. பதவிக் காலம் முடிவடைவதன் மூலம்.

<u>நிதிச் செயற்பாடுகள்</u>

எல்லா அமைப்புக்குமாக (கமிட்டி) நிதியொன்றை உருவாக்கி கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது. அமைப்பு தமது அங்கத்தவர்களின் பூரண விருப்புடன் குறிப்பிட்ட கால எல்லையொன்றிற்கான அங்கத்துவ சந்தாப்பணம் ஒன்றை தீர்மானித்துக் கொள்ள முடியும்.அமைப்பின் செயற்பாடுகளின் முன்னேற்றப் போக்கை பரீட்சித்துப் பார்த்த பின்னர் பிரதேச செயலாளரின் மூலம் செய்யப்படும் சிபார்சின் அடிப்படையில் அமைப்புக்காக 5000/- ரூபா பணத்தொகை ஒன்றை தேசிய முதியோர் செயலகத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். இப் பணத்தில் 3500/-ரூபாவை கட்டாயமாக நிலையான வைப்புக் கணக்கில் வைப்புச் செய்தல் வேண்டும். 1500/-ரூபாவை அன்றாடச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்த முடியும்.

அமைப்பின் நிதியின் பணத்தொகையை கூட்டிக் கொள்வதற்காக அமைப்பின் மூலம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முதியோர்களின் நலன் புரிதல்களை கருத்திற் கொண்டு செயற்படுவதற்கு உத்தேசித்துள்ள வேலைத் திட்டங்களுக்காக தயாரிக்கப்பட்ட செயல்திட்ட அறிக்கையை நிதி வழங்கும் அமைப்புக்களுக்கு சமர்ப்பித்தல், தனியார் நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளல் என்பவற்றின் மூலம் நிதியின் நிதி நிலைமையை உயர்த்திக் கொள்ள முடியும். பணம் கிடைத்தல் அவற்றைச் செலவிடுதல் பற்றிய சரியான அறிக்கைகள் தனாதிகாரியினால் நடைமுறைப்படுத்திக் கொண்டு செல்லப்பட வேண்டியதுடன் வருடாந்தம் கணக்கு கூற்றை தயாரித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு நிறுவனம் / உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அமைப்பை பதிவு செய்து கொள்வதற்காக இந் நிதிக் கூற்றை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்பு

அனைத்து அமைப்புக்களும் யாப்பொன்றை தயாரித்துக் கொள்ள வேண்டியிருப்பதுடன் இக் கையேட்டில் காட்டப்படுகின்ற வழிமுறையை அதைத் தயாரிப்பதற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும். யாப்பை திருத்தி அமைப்பதற்கு பொதுக்கூட்டத்தில் பிரேரனைக் கொண்டு வரப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் திருத்தி அமைக்கும் அதிகாரம் வழங்கப்படுகின்றது.

பொது ஒழுங்குவிதிகள்

I.பொதுக்கூட்டம், ஏனைய கூட்டங்கள் என்பவற்றுக்குச் சமூகமளிக்கும்
அங்கத்தவர்கள் மதுபானமோ, போதைப் பொருளோ பயன்படுத்தாமல் வருதல் வேண்டும்.

II.ஒழுங்கமைப்பின் உத்தியோகத்தர்களும், அங்கத்தவர்களும் ஒழுக்கம் உள்ளவர்களாகவும், நல்ல பண்புள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

III.கூட்டங்கள் மிகவும் நட்புடன் மேற் கொள்ளப்படுதல் வேண்டும். சண்டைகள்,சச்சரவுகள்,பிரச்சினைகள் ஏற்படாத வண்ணம் அதிகமானவர்களின் விருப்பப்படி தீர்மானம் எடுத்தல் வேண்டும்.
IV. கிராமிய அமைப்பு தமது பணிகளை நிறைவேற்றும் போது அரசியல்,சமய,குல,வேறுபாடின்றி செயற்படுதல் வேண்டும்.

V.கருணை,பாசம்,அன்பு,மரியாதை என்பவற்றை கடைப்பிடிக்க வேண்டியதுடன் மென்மையாக இருக்க வேண்டும் என்பதையும் எல்லா சந்தர்ப்பங்களிலும் முக்கியத்துவம் வழங்கிச் செயற்படுதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட கூட்டங்கள் நடத்துவது.

அமைப்பின் விசேட கூட்டங்கள் நடத்துவதற்காக சமயத் தலைவர்கள்,அரசியல் தலைவர்கள், பிரதேச செயலாளர், சமூக சேவை உத்தியோகத்தர்கள், கிராமசேவகர்,வழக்கறிஞர் ஒருவர், வைத்தியர் ஒருவர் பிரதேசத்திலுள்ள தொண்டர் அமைப்புகளின் தலைவர்கள் ஆகியவர்களை அழைத்தல் வேண்டும் இத்தினத்தில் முதியவர்கள் தொடர்பான சிறப்புச் சொற்பொழிவுகளை நடாத்துவதற்கும் முதியோர்களின் ஆற்றல்களை வெளிக்காட்டும் வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்யவும் முடியும்.

* கிராமிய முதியோர் அமைப்பின் கூட்டங்களின் போது எதிர்பார்க்ப்படுகின்ற செயற்பாடுகளும், வேலைத்திட்ங்களும்

I. ஒரு வருடத்தினுள் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கும் வேலைத்திட்ட மொன்றை அமைப்பின் மூலம் தயாரித்தல்.

இவ் வேலைத்திட்டம் தயாரிக்கும் போது பணம் செலவிடப்படாது பிரதேச வளங்களைப் பயன்படுத்தி அமைப்பிலுள்ள அங்கத்தவர்களை வளவாளர்களாகப் பயன்படுத்தி செயற்படுத்தக் கூடிய செயற்பாடுகளை இனங்கான முடியும்.

II. திட்டத்தை தயாரிப்பதற்கு பயன்படுத்த வேண்டிய வளப்பட்டியலொன்றை முதலில் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு அமைப்பின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தக்கூடிய பிரதேசத்தில் பொதுக்கட்டிடங்கள்,விரிவுரையாற்றுவதற்கு பொருத்தமான விரிவுரையாளர்கள்,அரச உத்தியோகத்தர்களின் பெயர்கள், முகவரிகள்,அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகள் பற்றிய விபரம், அமைப்பின் பணிகளுக்காக சேவைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய பிற நிறுவனங்கள், அல்லது உத்தியோகத்தர்களின் பட்டியலொன்றை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

III. பிரதேசத்திலுள்ள முதியோர்களின் எண்ணிக்கையைப் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பட்டியலொன்றை தயாரித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதும் அம் முதியோர்களின் தேவைகள் நோய் நிலமைகள் என்பன பற்றிய ஆய்வொன்றின் மூலம் தகவல்களை சேகரித்து கொள்வதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றை பயன்படுத்துதல் வேண்டும். (இதற்காக தயாரிக்கப்பட்ட மாதிரி வினாக்கொத்தொன்று இணைக்கப்பட்டுள்ளது) பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் பதிவேடொன்றில் பெயர்,முகவரி என்பவற்றுடன் குறித்து வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

IV. பிரதேசத்திலுள்ள பல்வேறு ஆற்றல்களுடைய முதியோர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட இன்னுமொரு பட்டியலை தயாரித்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

<u>பிரதேச/மாவட்ட/மாகாண ஒழுங்கமைப்பை உருவாக்குதல்.</u>

கிராமத்திலுள்ள அமைப்பு பிரதேசத்திலுள்ள ஏனைய செயற்படும் அமைப்புக்களுடன் தொடர்புகளை கட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும். இக்கிராமிய அமைப்புக்களினூடாக பிரதேச/மாவட்ட/ மாகாண அமைப்புக்களை கட்டியெழுப்புதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன் இது தொடர்பாக பிரதேச,மாவட்ட,மாகாண அதிகாரிகளுக்கு தேவையான ஆலோசனைகளை தேசிய முதியோர் செயலகத்தின் மூலம் வழங்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டவாறு ஒழுங்கமைந்த கிராமிய முதியோர் அமைப்புக்கள் தமது பிரதேசத்திலுள்ள முதியோர்களின் நலன்களை நோக்கமாக கொண்டும் அவர்களின் உரிமைகளை காப்பதற்காகவும் வேலைத் திட்டங்களை தயாரித்தலும் அவற்றை செயற்படுத்தலுக்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதற்கு பிரதேசத்திலுள்ள முதியோர்களின் ஒத்துழைப்பையும் தேசிய முதியோர் செயலகம், மாகாண சமூகசேவை பணிப்பாளர்/ மாகாண முதியோர் செயல்திட்ட உத்தியோகத்தர்/ சமூகசேவை உத்தியோகத்தர்/ கிராமசேவகர்கள் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் செயற்படுவது வசதியானதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமிய முதியோர் அமைப்பின் மூலம் செயற்படுத்துவதற்கு எதிர் பார்க்கப்படுகின்ற வேலைத்திட்டம்.

செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வேலைத் திட்டத்தை மூன்று பிரிவுகளாக தயாரிக்க முடியும்.

01.தீவிரமான (அவசரமான) தேவைகளுள்ள முதியவர்களுக்காக அமைப்பின் மூலம் அல்லது அரச/அரசசார்பற்ற அமைப்புக்களின் உதவியுடன் வழங்கப்பட வேண்டிய சேவைகள்

(உ+ம்) சுகாதாரம் உணவு, ஆடைஅணிகள், வசிப்பிடம், நிதியுதவி போன்ற சேவைகள்,நோய்வாய்பட்டு அல்லது அங்கவீனமுற்று அல்லது வீட்டிலிருந்து வெளியேற முடியாத முதியோர்களை பார்ப்பதற்குச் செல்வதற்காக அமைப்பின் மூலம் வேலைத்திட்டமொன்றை தயாரித்தல் வேண்டும்.

02.விரைவாக அதிகரித்து வரும் முதியோர் தொகையைப் பற்றியும் அதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள், முதியோர்களின் தேவைகள் ஆகியவை தொடர்பாகவும், அறிவூட்டல் வேலைத்திட்டங்கள் என்பவற்றைச் செயற்படுத்தல். பாடசாலை சிறுவர்கள், இளைஞர்கள், சமய ஒழுங்கமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பொதுசன அமைப்புக்கள், அரச மாகாண நிறுவக அமைப்புக்கள், ஊடக நிறுவனங்கள் என்பவற்றுடன் தொடர்புற்று வேலைத் திட்டங்களையும் செயல்படுத்த முடியும்.

03.முதியோர்களுக்கு வழங்கப்படும் சேவைகள்.

1. சுகாதார சேவை – பாதுகாப்பு, அங்கவீனம், நோய் தடுப்பு தொடர்பான வேலைத்திட்டங்கள்.
2. சுய தொழில்களும் வருமானம் தேடித்தரக் கூடிய வழிகள் பற்றிய வேலைத்திட்டங்கள்.
3. முதியோர்களுக்கு தனியார் துறைகளின் மூலமும் பல்வேறு ஒழுங்கமைப்புக்களின் மூலம் தொண்டர் அடிப்படையில் அல்லது பகுதி நேர சேவைகளை வழங்குதல்.
4. முதியோர்களின் சட்டம் தொடர்பான பிரச்சினைகள் ஓய்வூதியம்,சேமலாபநிதி ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பாகவுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவுதல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சட்டப் பிரச்சினை தொடர்பாக சட்ட உதவி வழங்கல் மன்றத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்

5. முதியோர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்காக உரிய நிறுவனங்களுக்கு, ஊடகங்களுக்கு அது தொடர்பான விடையங்களை சமர்ப்பித்தல்.

கிராம முதியோர் அமைப்பின் மூலம் செயற்படுத்தக்கூடிய பிறசெயற்பாடுகள்.

01. முதியோர் அடையாள அட்டை, அதை பெற்றுக் கொள்ளக்கூடிய விதம், அதன் மூலம் கிடைக்கின்ற பயன்கள் என்பன பற்றி முதியோர்களை அறிவூட்டுதல்

இது பற்றி பிரதேச செயலகத்திலுள்ள சமூக சேவை உத்தியோகத்தரைச் சந்தித்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.60 வயது பூர்த்தியடைந்த முதியோர்களுக்கு மாத்திரமே இவ்வடையாள அட்டை வழங்கப்படுகின்றது. இவ்வடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கு அதிக எண்ணிக்கையிலான முதியோர்கள் இருப்பதாயின் பிரதேச செயலாளருக்கு அறிவித்து அவரினூடாக குறை வருமானம் பெறுகின்ற முதியோர்களுக்காக இலவசமாக புகைபடம் பிடிப்பதற்கு நடமாடும் சேவை வேலைத் திட்டமொன்றை ஒழுங்கு செய்து கொள்ளமுடியும்.

இவ்வடையாள அட்டை வைத்தியசாலை, வங்கி தபால் அலுவலகங்கள்,அரச நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து முதியோர்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முனையும் போது அவர்களுக்கு முன்னுரிமை வளங்கப்பட வேண்டுமென உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக அரச மருந்தக கூட்டுதாபனத்தின் கீழ் இயங்கும் ஒசுசலைகளின் மூலம் மருந்துகளை வாங்கும் போது மருந்து பட்டியலில் உள்ள மருந்துகளுக்கு 5% கழிவு வழங்கப்படுகின்றது. இச்சலுகை எதிர் காலத்தில் மேலும் அதிகரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. <u>முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் ஆரம்பித்தல்.</u>

முதியோர்கள் தனிமைப்படுத்தப்படுவது பாரிய சமூக பிரச்சனை யொன்றாக மாறியுள்ளது தனிப்படுத்தப்படுவது உடலியல், உளவியல் பின்னடைவை ஏற்படுத்துவதில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவே கிராமிய முதியோர் அமைப்பின் மூலம் பிரதேசத்திலுள்ள முதியோர்களின் தேவைகளை தேடியறிந்து முதியோர் பகல் பராமரிப்பு நிலையங்களை ஆரம்பித்து அவற்றை நடாத்திச் செல்வதற்கு கிராமிய முதியோர் அமைப்புக்களின் மூலம் உன்னத பணியாற்ற முடியும்.

பிரதேசத்தில் இயங்காமல் உள்ள ஒரு கட்டிடத்தை அல்லது சமய நிலையமொன்றை முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தை நடத்துவதற்கு பயன்படுத்த முடியும். சமவயது முதியோர்கள் ஒற்றுமையாகவும், பேசிக்கதைத்து தமது கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் பயனுள்ள பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் சமய நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும் இதன் மூலம் முடிகின்றது. இதற்கு சமூகசேவை உத்தியோகத்தர் கிராம சேவகர் ஆகியோருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதுடன் பிரதேச செயலாளரின் சிபார்சின் அடிப்படையில் பகல் பராமரிப்பு நிலையத்திற்கு தேவையான அடிப்படை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக (கதிரை, நூல் நிலையமொன்றை நடாத்துவதற்கு தேவையான உபகரணங்கள்) ரூபா 25000/- பணத்தொகை யொண்றையும் சுயதொழில் செயல் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக 10000/- ரூபாவும் பகல் பராமரிப்பு நிலையத்திற்கு பெற்றுக் கொள்ள முடியும். இப்பணம் தேசிய முதியோர் செயலகத்தின் மூலம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்படுகின்றது.

03. <u>சமய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்</u>

* போயா தினங்களில் சில் எடுத்தலுக்கு ஒழுங்கு செய்தல்,அறநெறிச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தியான வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தலும், சமய தலைவர்களை அழைத்து அறநெறிப் போதனை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

* கிராமத்தில் வாழ்கின்ற சிறுவர்கள்,இளைஞர்கள் அனைவரையும் பங்கேட்கச் செய்து விகாரைகளில்,பள்ளிகளில், கோவில்களில் சிரமதான செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், சிறிய பிள்ளைகளை அறநெறிப் பாடசாலைகளுக்கு செல்வதற்கு உற்சாகப்படுத்தல். சில்லெடுத்தல் வேலைத்திட்டங்களில் பங்கேற்கச் செய்தல் போன்ற செயற்பாடுகள்.

04. <u>சுகாதார வேலைத் திட்டங்கள்.</u>

விசேடமாக பிரதேசத்திலுள்ள சுகாதார வைத்திய உத்தியோகத்தர்களைக் கொண்டு வைத்திய சிகிச்சை முகாம்களை நடத்துதல். முதியோர்களுக்கு பொருத்தமான உணவு வகைகள், நோய்களிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளல் போன்ற விடயங்கள் பற்றி அறிவூட்டுதல்.

இதற்கு மேலதிகமாக உடற்கல்வி ஆலோசகர்களைக் கொண்டு முதியோர்களை உடற் பயிற்சிகளில் ஈடுபடும் வேலைத் திட்டங்களை மேற்கொள்ளல்.

05. <u>பொது சமூக சேவை செயற்பாடுகளை செயற்படுத்துதல்.</u>

* தமது கிராமத்தில் அல்லது அருகிலுள்ள பிரதேசங்களில் இடர்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அல்லது வேறேதும் துன்பங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தொடர்பு கொண்டு முடிந்தளவு உதவி ஒத்தாசைகள் வழங்குதல்.

* கிராமத்தில் வாழ்கின்ற மதுவிற்கு அடிமையானவர்களை அதிலிருந்து விடுபடுவதற்கான அறிவூட்டல்களை மேற் கொள்ளல்.

* விசேட தேசிய உற்சவ நாட்களில் பல்வேறு வேலைத் திட்டங்களை ஒழுங்கு செய்தல். (புது வருட உற்சவம்,ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவங்கள் சர்வதேச முதியோர் தின உற்சவம் ஆகியவற்றின் போது நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்)

06. <u>சிரமதான வேலைத்திட்டம்.</u>

கிராமத்திலுள்ள பொதுப் பாதைகள் பொது இடங்கள் ஆகியவற்றை ஒழுங்கமைப்பதற்கும்,சுத்தம் செய்வற்குமான சிரமதான வேலைத் திட்டங்களை ஒழுங்கு செய்தல். விசேடமாக பிரதேசத்தலுள்ள பாதிக்கப்பட்ட முதியோர்களின் வீடுகள் போன்றவற்றை சுத்தம் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

07. தமது முதியோர் அமைப்பின் அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக உரிய அரச, அரச சார்பற்ற அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

08.பிரதேசத்தில் அழிந்து விடாமல் பேணப்பட வேண்டிய கலாச்சார விழுமியங்களை பாதுகாப்பதற்கான பொருத்தமான வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

09.திறனுள்ள முதியோர்களை வளநபர்களாகப் பயன்படுத்தி பாடசாலை பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதற்காக துணை வகுப்புக்களை நடத்துதல்.

10.முதியோர்களை பாதிக்கின்ற சட்ட நடவடிக்கைகள் பற்றி விரிவுரைகளை ஒழுங்கு செய்தல்.

* காணிச் சொத்துக்களின் உரிமையை அடுத்தவர்களுக்கு வழங்குதல் தொடர்பாக செயல்பட வேண்டிய விதம் பற்றி அறிவூட்டுதல் இதற்கு தேவையான ஆலோசனை தகவல்களை சட்ட உதவி வழங்கல் மன்றத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். அதன் முகவரி இணைப்பு உத்தியோகத்தர், சட்ட உதவி வழங்கல் மன்றம், இலங்கை சட்டத் தரணிகள் சங்கம்,153 மிகிந்து மாவத்தை, கொழும்பு-12. தொலைபேசி இலக்கம்.01-2386386,2389565 தொலை நகல் 01-2386386. ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.பிரதேசத்தில் நெருக்கடிக்குள்ளாகி (அழுத்தத்திற்கு உட்பட்டுள்ள) முதியோர்களுக்கு உதவி வழங்கல் நடவடிக்கைளை மேற்கொள்ளல்.

பிள்ளைகளின் மூலம் கவனியாது விடப்பட்ட பெற்றோர்கள் இருப்பதாயின் அப்பிள்ளைகளுக்கு அது தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்துதல் அதற்கு பிள்ளைகள் நேர்துளங்களை காட்டாத சந்தர்ப்பத்தில் (ஒத்துழைப்பு வழங்க மறுக்கும் சந்தர்ப்பத்தில்) சட்டரீதியான பாதுகாப்பை பெற்றுக் கொள்வதற்காக பெற்றோர்களின் வேண்டுதலை உரிய துறைக்கு சமர்ப்பித்தல். (இவ்விடயம் தொடர்பாக செயற்படுகின்ற பிரிவின் கவனத்திற்கு கொண்டு வருதல்.

12.பொதுவாக தமது பிரதேசத்திலுள்ள முதியோர்களுக்காக விரும்பத்தக்க மனநிலையை கட்டியெழுப்புதற்கு உதவி ஒத்தாசை வழங்குதலும் முதியோர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

ஏனையவை

* தமது முதியோர் அமைப்பு உருவாக்கப்பட்டு ஒரு வருடமளவு கழிந்த பின்னர் 2000ஆம் ஆண்டு 9ம் இலக்க முதியோர்களின் உரிமைகளை பாதுகாத்தல் சட்டத்தின் கீழ் தேசிய முதியோர் செயலகத்தில் பதிவு செய்வதற்கான மேற்கொள்ள முடியும் இதற்காக பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

1.முதியோர் அமைப்பின் செயலாளரின் மூலம் பூரணப்படுத்தப்பட்டு கையொப்பம் இடப்பட வேண்டிய விண்ணப்பப் படிவம் (இதை தேசிய முதியோர் செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.)

2.யாப்பின் பிரதிகள் இரண்டு
3.ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வாளர் ஒருவர் உறுதிப்படுத்திய கடந்த ஆண்டின் கணக்கு கூற்றின் பிரதியொன்று

4.கடந்த ஆண்டின் பொதுக் கூட்டத்தின் அறிக்கையின் பிரதியொன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.எதிர் காலத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கும் வேலைத்திட்டம்.

* தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உபயோகிப்பதற்காக உங்கள் முதியோர் அமைப்பின்பெனர் (BENAR) ஒன்றை தயாரித்து வைத்துக் கொள்வது ஏற்றதாகும்.

<u>மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய முதியோர் அமைப்பை உருவாக்கி செயற்படுத்துவதன் மூலம் பிரதேசத்தில் வாழ்கின்ற முதியோர்களுக்கு சிறந்த சேவையொன்றை வழங்குவதே எமது எதிர் பார்ப்பாகும்.</u>

முதியோர்களின் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வினாக் கொத்து.

1. பெயர்:-

2. முகவரி:-

3. வயது:-

4. சிவில் நிலைமை:- விவாகமானவர்/விவாகமாகாதவர்/ பிரிந்தவர்/விதவை

5. பிள்ளைகளின் எண்ணிக்கை

| பெயர் | வயது | திருமணமானவரா | முதியவருடன் வாழ்கின்றாரா |
|---|---|---|---|
| | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. முதியவரின் ஆரோக்கிய நிலை

* உடல் ஆரோக்கியம் :- நன்று, ஓரளவு நன்று ,பலவீனம்
* உள ஆரோக்கியம்
* சமூகமயமாதல்

* தற்போது வைத்திய சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறாரா?
* அவ்வாறில்லையாயின் சிகிச்சை தேவைப்படுகின்றதா?
* ஆலோசனை தேவைப்படுகின்றதா?
* அமைப்பின் அங்கத்தவர்களின் மூலம் அவரின் வீட்டுக்குச் சென்று பார்க்க வேண்டிய ஒருவரா?

7. <u>குடும்பத்தில் உதவி, உபகாரம்</u>.

* உணவுபாணங்கள் கிடைக்கின்றதா?
* ஆடையணிகள் கிடைக்கின்றதா?
* வ்சிப்பதற்காக வசதியளிக்கப்பட்டுள்ளதா?

8. <u>தற்போது மேற்கொள்ளும் பணிகள்</u>

* வீட்டு வேலைகளுக்கு உதவுதல்
* பிள்ளைகள் பேத்தி, பேரர்களை பராமரித்தல்.
* மேலதிக வகுப்புகள் நடாத்துதல்
* விவசாயம் செய்தல்
* பகல் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்லல்
* பிறர் குறிப்பிடவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பகுதி நேரத்திற்கு தொண்டர் சேவைக்கு செல்ல முடியுமா?
பகல் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்ல முடியுமா?

10. இவ்வங்கத்தவர்களின் மிக முக்கிய அவசர தேவைகள் 5ஐ குறிப்பிடவும்.

1.
2.
3.
4.
5.

................................ ........................................................

திகதி: வினாக்கொத்தைப் பூரணப்படுத்துபவரின் கையொப்பமும், பெயரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Litho Printers 4204532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org